


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலைத் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், சர்க்கரைத் துறை இயக்குநர் த. அன்பழகன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, சுற்றுலாத் துறை இயக்குநர் தா. கிறிஸ்துராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் (4.7.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் கோ. பிரகாஷ், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், நகர் ஊரமைப்பு இயக்குநர் பா. கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கடலூர் துறைமுகத்தை இயக்குவதற்காக மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தி.ந. வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன், மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ரவி சங்கர், இயக்குநர் கல்யாண் சொரூப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ‘ஓரணியில் தமிழ்நாடு’ - ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம்

# 30 சதவிகித வாக்காளர்களை, உறுப்பினராகச் சேர்த்திடுங்கள்!

## சென்னை ராயபுரத்தில் அண்ணா- கலைஞர் சிலை திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**சென்னை, ஜூலை.5-**

**சென்னை, ராயபுரம், ராபின்சன் பூங்கா அருகில் பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளை நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து, திரளாக குடியிருந்த மக்கள் முன்பாக, எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

அப்போது அவர், `இன்று என் வாழ்க்கையில் மறக்க முடியாத, பெருமை மிகுந்த நாள். கலைஞர் சிலையை, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் திறந்து வைக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன். ஆனால், இன்று கழகம் பிறந்த இந்த வடசென்னையில், கலைஞர் சிலையையும், புனரமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலையையும் திறந்து வைத்து இருக்கிறேன்’ என்று குறிப்பிட்டார்

துணை முதலமைச்சர் ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:

இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று, 6 வருடங்கள் முடிந்து, 7வது வருடத்திற்குள் உங்களின் ஒத்துழைப்போடு, அன்போடு, பாசத்தோடு, வழிகாட்டுதல்களோடு இன்றைக்கு அடியெடுத்து வைக்கிறேன் என்றால், அதற்கு மிகமிக முக்கிய காரணம், அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள்தான்.

### ஒரு கோடி ரூபாய் தேர்தல் நிதி

நான் இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்றபோது, அண்ணன் ஆர்.டி. சேகர் அவர்கள். என் அணியில் துணைச் செயலாளராக இருந்து, அப்போது எனக்கு வழிகாட்டியவர். நம் மாண்புமிகு முதலமைச்சர், தலைவரின் வளர்ப்பு அவர். அதனால் தான், இன்றைக்கு தமிழ்நாட்டிலேயே மற்ற மாவட்டப் பொறுப்பாளர்களுக்கு எல்லாம் போட்டியாக முதல் மாவட்டப் பொறுப்பாளராக தேர்தல் நிதியாக ஒரு கோடி ரூபாயை, மேடையிலேயே அறிவித்து, கொடுத்தும் இருக்கிறார். நான்கூட வரும்போது நினைத்தேன். இன்றைக்கு மூன்று தொகுதிகளில் நிகழ்ச்சி. மற்ற மாவட்டச் செயலாளர்கள் எல்லாம் ஒரு தொகுதியில்தான் நிகழ்ச்சி ஏற்பாடு செய்வார்கள். இன்னொரு தொகுதிக்கு, இன்னொரு நாள் தேதி வாங்குவார்கள். ஆனால், மூன்று நாள் நிகழ்ச்சியை, இன்று ஒரே நாளில் நடத்தி இருக்கிறார் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். அவர் தேர்தலுக்கு முன்பு மீண்டும் என்னை அழைக்க வேண்டும். தேர்தல் நிதியை நான் ஒவ்வொரு முறை வரும்போதும் அவர் கொடுக்க வேண்டும். அவர்



கொடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### பெருமை மிகுந்த நாள்

இன்று என் வாழ்க்கையில் மறக்க முடியாத, பெருமை மிகுந்த நாள். கலைஞர் சிலையை, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் திறந்து வைக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன். ஆனால், இன்று கழகம் பிறந்த இந்த வடசென்னையில், கலைஞர் சிலையையும், புனரமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலையையும் திறந்து வைத்து இருக்கிறேன். அண்ணா சிலையை 60 வருடங்களுக்கு முன்பு, இதே இடத்தில் கலைஞர் திறந்து வைத்தார்கள். இன்றைக்கு மீண்டும் புனரமைக்கப்பட்ட அந்த சிலையையும், ஒரே இடத்தில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் சிலையையும், அண்ணா சிலையையும் திறந்து வைக்கின்ற வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, இவ்வளவு சிறப்பான, எழுச்சியான வரவேற்பைக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உங்கள் வீட்டுப் பிள்ளை

குறிப்பாக, 5.30 மணியிலிருந்து, நான் மக்கள்வெள்ளத்தில் ஊர்ந்து வந்துகொண்டு இருக்கிறேன். அந்த அளவிற்கு வடச்சென்னைக்கு எப்போது வந்தாலும் இதே எழுச்சி தான். கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர், அதுதான் என் மனதிற்கு நெருக்கமான ஒரு பொறுப்பு. அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத்துறை அமைச்சர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அமைச்சர், இப்போது துணை முதலமைச்சர். உங்களின் அன்போடு உங்களின் ஆதரவாளர். ஆனால், அவற்றையெல்லாம்விட எது நிரந்தரம் என்றால், நான் எப்போதுமே உங்கள் வீட்டுப் பிள்ளையாக, உங்கள் வீட்டு பொறுப்பான செல்லப்பிள்ளையாக இருப்பேன். எப்போதும் உங்களின் அன்பிற்கு நான் கட்டுப்பட்டுவேன்.

`ஓரணியில் தமிழ்நாடு’ என்று தலைவர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு அறிவித்தார். நம் நிர்வாகிகள் அனைவருக்கும் தனியாக ஒரு குழு அமைத்து, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வாக்காளர்களின் வீட்டிற்கும் சென்று, கழக அரசின் சாதனைகளை, கழகத்தின் வரலாற்றை, நம் வாக்குறுதிகளை, அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணி தமிழ்நாட்டிற்குச் செய்து இருக்கின்ற துரோகத்தை எல்லாம் மக்களிடம் எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தது 30 சதவிகித வாக்காளர்களை, கழகத்தில் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும் என்ற இலக்கைக் கொடுத்து இருக்கிறார். நீங்களும் தொடர்ந்து இரண்டு நாட்களாக களத்தில் இறங்கி, அந்த பணிகளை ஆரம்பித்து இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நம் தலைவர் அவர்களே சென்னையில் வீதி, வீதியாக சென்று வாக்காளர்களைச் சந்தித்து, அவர்களிடம் ஆட்சியின் சாதனைகளை எடுத்துச் சொல்லி, உறுப்பினராகச் சேர்த்து வருகிறார். நானும் என் தொகுதி சேப்பாக்கம்திருவல்லிக்கேணியில் அந்தப் பணிகளைத் தொடங்கி இருக்கிறேன்.

இங்கு வந்திருக்கின்ற இளைஞர் அணித் தம்பிமார்கள், கழகத் தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்தவர்கள், மகளிர் அணியைச் சேர்ந்த பெண்கள் தாய்மார்கள் உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்வது அரசின் சாதனைகளைத் தொடர்ந்து மக்களிடம், எடுத்துக்கொண்டுபோய் சேருங்கள். இவ்வளவு தாய்மார்கள் வந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு நான் ஞாபகப்படுத்தத் தேவையில்லை.

நம் முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொன்னார். நம் ஆட்சி அமைந்து தலைவர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து, மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதி திட்டமான விடியல் பயண திட்டத்தில் கையெழுத்துப் போட்டார். பெண்கள் கட்டணமில்லாமல் அரசின் பேருந்துகளைப் பயன்படுத்தலாம் என்று அறிவித்தார். இந்த நான்கு வருடங்களில் பெண்கள் மட்டும் 730 கோடி முறை பயணம் செய்துள்ளார்கள். மாதந்தோறும் ஒவ்வொரு மகளிரும் 800 ரூபாயிலிருந்து, 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

பெண்கள் படிக்க வேண்டாம். பள்ளிப்படிப்பு படித்தால் மட்டும் பத்தாது. உயர்கல்வி படிக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் புதுமைப்பெண் திட்டத்தை அறிவித்தார். அரசுப் பள்ளியில் படித்து எந்தவொரு தனியார் கல்லூரியில் சேர்ந்து படித்தாலும், அவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக மாதம் 1,000 ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறது நம் அரசு. இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து, பார்த்து செய்துகொண்டு இருக்கிறார்.

### விரைவில் வழங்கப்படும்

உங்களுக்குத் தெரியும் நாங்கள் செல்கின்ற இடத்தில் எல்லாம் ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது என்று மகளிர் மகிழ்ச்சியாகச் சொல்கிறார்கள். ஒரு சிலர் வரவில்லை என்று உரிமையாகக் கேட்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது, கிட்டத்தட்ட 22 மாதங்களாக கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை செல்கிறது. இப்போது தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார். சில பேருக்கு விடுபட்டு இருக்கிறது. வெகு விரைவில் அதற்கான முகாம்கள் நடத்தப்பட்டு, அதுவும் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ள மகளிர் அத்தனைப்பேருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் விரைவில் வழங்கப்படும் என்று தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்.

இப்படி மகளிர், மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகளாக இருக்கட்டும் இப்படி அனைத்து தரப்பினருக்கும், ஒவ்வொரு திட்டத்தையும் நம் தலைவர் அவர்கள் பார்த்து பார்த்து செய்துகொண்டு இருக்கிறார். அடுத்து வருகிற 8 மாதங்களில் 2026 சட்டமன்றத் தேர்தலை நாம் எதிர்கொள்ள இருக்கிறோம். தலைவர் அவர்கள் வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று குறைந்தது 200 தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் வென்று புதிய சாதனைப் படைத்து, மீண்டும் தலைவர் அவர்களை இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைப்பதுதான் நம் முதல் இலக்கு. அடுத்த 9 மாதங்கள் களத்தில் இறங்கி, மக்களைச் சந்தித்து நம் அரசின் சாதனைகளை எடுத்துச்சொல்லி, ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டுமென இளைஞர் அணித் தம்பிமார்கள், பொது மக்கள், அனைத்து தாய்மார்கள் என உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

### உழைப்புதான் மக்களின் அன்பு

வங்கியில் `ஆர்.டி’ என்றால், `ரெக்கரிங் டெபாசிட்’ என்று சொல்வார்கள். வங்கியில் பணம் போட்டோம் என்றால், ஒரு காலத்திற்குப் பின்பு சேமித்து அதிகமாகி, நமக்கு அதிகமாகக் கொடுப்பார்கள். அதுமாதிரிதான் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களின் உழைப்பை கழகத்திற்காக அவர் கொடுத்து, கொடுத்து அந்த உழைப்புதான் இன்றைக்கு மக்களின் அன்பாக இன்றைக்கு நம் கழகத்திற்கு கிடைத்து இருக்கிறது.

எனவே, 200 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும் என்றால், அதற்கு முதலில் வட சென்னையில் உள்ள மூன்று தொகுதிகள் ஆர்.கே.நகர், ராயபுரம், பெரம்பூர் இந்த மூன்று தொகுதிகளிலும் நிச்சயம் நம் உதய சூரியன் வெற்றிபெறத்தான் போகிறது. நம் தலைவர் மீண்டும் முதலமைச்சராக அமரத்தான் போகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், வந்திருக்கின்ற அனைத்து தாய்மார்களுக்கும், இளைஞர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரிம்ஸ் மூர்த்தி, எபினேசர், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜோயல், மாவட்டக் கழக நிர்வாகிகள் வெற்றிவேல், கோபி, நாகம்மை கருப்பையா, கமலக்கண்ணன், தயாளன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளைய அருணா, நா.மனோகரன், சிறுபான்மை நலக்குழுச் செயலாளர் மருத்துவர் சுபேர்கான், பகுதிக் கழகச் செயலாளர்கள் வா.பெ.சுரேஷ், செந்தில்குமார், ஜெயராமன், முருகன், பாண்டிச் செல்வம், சிவக்குமார், சண்முகம், ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கௌதமன், லயோலா மதன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, பொன் இளவரசன், ரவிக்குமார், அண்ணா சிலையை வடிவமைத்த எஸ்.பி.பிள்ளை அவர்களின் பேரன் தீனதயாளன், மாமன்ற உறுப்பினர்கள் கீதாசுரேஷ், வேளாங்கன்னி, வட்டக் கழகச் செயலாளர் கண்ணன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சாந்தகுமார், அப்துல்மாலிக் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.